IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

OS.NO. - 190/2022

P.W.1 - திரு.மணி, த/பெ. சி.முனுசாமி

DATE - 27.08.2024

குறுக்கு விசாரணை

ஏப்ரல் 1980 ல் எங்களுக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மே 1980 ல் என் மனைவியான பிரதிவாதி ஒரு டிப்ளமா படிப்பில் சேர்ந்தால் என்றால் சரிதான். திருமணம் ஆகி வரும் போது வாதி அவர் அணிந்திருந்த ஆடைகளோடு வந்தார் வேறு எதுவும் கொ்ண்டு வரவில்லை.எங்களது திருமணம் காதல் திருமணம் ஆகும். திருமணம் ஆகி வரும் போது அவர் 20 சவரம் நகையோடு வந்தார் என்றால் சரியல்ல. திருமணம் சமயத்தில் எனது மனைவியின் மாத வருமானம் Stipent–ஆக அவர் பெற்ற ரூ.580/– என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் அவருக்கு எந்த வருமானமும் இல்லை. படிப்பு முடிந்து 1982 முதல் 1988 வரை அவர் மாத வருமானம் ரூ.500/–க்கு ஒப்பந்த அடிப்படையில் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் வேலை பார்த்தார். அவருக்கு முதலில் மாதம் ரூ.2500/–ம் வேலையை விட்டு நிற்கும் போது மாதம் ரூ.5500/–ம் சம்பளமாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பிறகு அவர் சவுதி அரேபியா நாட்டிற்கு வேலை போவதாக சொன்னார் அதன் அடிப்படையில் தமிழ்நாடு மேன் பவர் கார்பரேஷன் மூலம் பணம் செலுத்தி நான் அவரை சவுதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்தேன். 1988 ல் அவ்வாறு அவர் சவுதி

அரேபியாவிற்கு சென்ற போது எனக்கு ரூ.30,000/- செலவானது அதற்கான செலவு கணக்கு என்னிடம் இல்லை. மொத்தமாக ரூ.5000/- தான் செலவானது என்றால் சரியல்ல. அரசாங்கம் மூலம் சென்றதால் விமான டிக்கட் செலவை அரசு ஏற்றது என்றால் சரிதான். அதற்காக நான் டெல்லிக்கு நான் 5-6 முறை அவரை விமானத்தில் அழைத்து சென்று ரூ.25,000/- செலவு செய்தேன் அதற்கான செலவு கணக்கு என்னிடம் இல்லை. சவுதி அரேபியாவில் பிரதிவாதி சுகாதார துறையில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். வருடத்தில் அவருக்கு 45 நாட்கள் விடுமுறை கிடைத்து அவ்வாறு கிடைக்கும் விடுமுறை நாட்களில் வருடா வருடம் பிரதிவாதி இந்தியா வந்து செல்வார். அவர் சம்பாதித்த பணத்தை வங்கி மூலம் எனக்கு அனுப்புவார் என்றால் சரியல்ல. 45 நாட்கள் விடுமுறையில் வரும் போது நகையும் பணமும் என்னிடம் கொடுப்பார் என்றால் சரியல்ல. 1989 ல் விடுமுறையில் வரும் போது ரூ.3,00,000/- பணமும் 20 சவரன் நகையும் பிரதிவாதி என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1990 ல் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். 1990 ல் கல்ப் போர் நடந்ததால் அவர் விடுமுறையில் ஊருக்கு வரமுடியவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கொடுத்த பணத்தை தான் நான் கிரைய தொகையாக கொடுத்தேன் என்றால் சரியல்ல. கிரைய தொகை நான் கொடுத்திருந்தாலும் பிரதிவாதியை நான் காதலித்து திருமணம் செய்திருந்ததால் அவர் மீது இருந்த அன்பினாலும் பாசத்தினாலும் அவர் பெயரில் கிரையம் பெற்றேன். இன்று வரை பிரதிவாதி மீது அன்பும், பாசமும் இருக்கிறது. எங்களுக்கு இரு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தற்சமயம் முறையே 42 மற்றும் 37 வயதாகிறது. நான்

காண்டிராக்ட் தொழில் செய்வரை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்றும் அதை மீட்டு என் பெயருக்கு மாற்றி தர இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் கோரியுள்ள தாவா பரிகாரங்கள் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. இதை வரை நான் எந்த காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை. என்னை தேடி எந்த காவல் நிலையத்தில் இருந்தும் போலீசார் வரவில்லை. 18.01.2006 ல் பிரதிவாதி என் மீது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் அது பொய் புகாராகும். கிரைய தொகை பிரதிவாதி கொடுத்ததாலும் கிரைய பத்திரம் அவர் பெயரில் கிரைய பத்திரம் உள்ளதாலும் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அடமானம் வைத்து பிரதிவாதி எனக்கு ரூ.5,00,000/- கடன் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

S ABDUL MALIK

Digitally signed by S ABDUL MALIK